# தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் - 2026

# கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தேர்தல் பிரச்சாரம்!

## இன்று தருமபுரி, சேலத்தில் உரையாற்றுகிறார்!

தமிழகம் முழுவதும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்கு சேகரிக்கிறார்.

இந்த தொடர் பிரச்சாரத்தை தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மார்ச் 31-ஆம் தேதி திருவாரூரில் தொடங்கிய நிலையில், ஐந்தாம் கட்ட பரப்புரையை ஏப்ரல் 13-ஆம் தேதி திருவள்ளூரில் தொடங்கினார்.

தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில், சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர்கள் மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இன்று தருமபுரி, சேலத்தில் உரையாற்றுகிறார்.



## தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தேர்தல் பிரச்சார விவரம்

| நேரம் | இடம் | கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள் |
|---|---|---|
| | **15.04.2026 (புதன்கிழமை)** | |
| மாலை 5 மணி | **தருமபுரி** (பொதுக்கூட்டம்) | பாலக்கோடு, பென்னாகரம், தருமபுரி, பாப்பிரெட்டிப்பட்டி, அரூர் |
| மாலை 7 மணி | **சேலம்** - தேசிய நெடுஞ்சாலை, சீலநாயக்கன்பட்டி (பொதுக்கூட்டம்) | சேலம் மேற்கு, சேலம் வடக்கு, சேலம் தெற்கு, கெங்கவல்லி, ஆத்தூர், ஏற்காடு, ஓமலூர், மேட்டூர், எடப்பாடி, சங்ககிரி, வீரபாண்டி |
| | **16.04.2026 (வியாழக்கிழமை)** | |
| மாலை 5 மணி | **நாமக்கல்** - பொம்மு குட்டைமேடு (பொதுக்கூட்டம்) | நாமக்கல், ராசிபுரம், சேந்தமங்கலம், குமாரபாளையம், பரமத்திவேலூர், திருச்செங்கோடு |
| மாலை 7 மணி | **பெரம்பலூர்** - ஒதியம் பிரிவு, குன்னம் (பொதுக்கூட்டம்) | பெரம்பலூர், குன்னம், அரியலூர், ஜெயங்கொண்டம் |

குறிப்பு: ❖ கழகத் தலைவர் அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் பிரச்சாரத்திற்கு குறித்த நேரத்திற்குள் செல்ல வேண்டியுள்ளதால், காலத்தின் அருமை கருதி, எக்காரணம் கொண்டும் கழகத் தோழர்கள், வழியில் வேறு எவ்வித நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டாமென கண்டிப்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

❖ கழக முன்னணியினர் மற்றும் நிர்வாகிகள் அனைவரும் தலைவர் அவர்கள் தங்கும் இடத்திற்கு வருவதை தவிர்த்து, பிரச்சாரக் கூட்டத்திற்கு நேரடியாக வருகை தர வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18

தலைமைக் கழகம்,
தி.மு.க.



நெல்லை மாவட்டம், இராதாபுரம் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் கழக வெற்றி வேட்பாளர் மு.அப்பாவு அவர்களை ஆதரித்து கழக துணைப் பொதுச் செயலாளர் – கழக நாடாளுமன்ற குழுக் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் திசையன்விளை மெயின் பஜாரில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல், கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் எம்.பி., வி.எஸ்.ஆர்.ஜெகதீஷ், அலெக்ஸ் அப்பாவு, ஜோசப் பெல்சி, ஆரோக்கிய எட்வின், எரிக்ஜூடு, ஜான் ரபீந்தர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில், கள்ளக்குறிச்சி சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் வி.சி.க. வேட்பாளர் முனைவர் வழக்கறிஞர் கு.மாலதியை ஆதரித்து பிரச்சாரம் மேற்கொண்டார். இந்தப் பிரச்சாரத்தின் போது பொதுமக்களிடம் பானை சின்னத்தில் வாக்குகளை சேகரித்தார். அப்போது கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணிக் கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.